சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

மானியக் கோரிக்கை எண். 29

# அறிவிப்புகள்
# 2015 - 2016


## எஸ்.பி. சண்முகநாதன்
சுற்றுலாத் துறை அமைச்சர்

**1. கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் "சுற்றுலா பயணியர் தங்கும் விடுதி" மற்றும் சுற்றுலா வரவேற்பு மையம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்பு மிக்க சிதம்பரத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி, சுற்றுலாப் பயணியர் தங்கும் விடுதி மற்றும் சுற்றுலா வரவேற்பு மையம் ஒன்று கட்டுவதற்கு ரூபாய் 7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் "யாத்ரி நிவாஸ்" (சுற்றுலாப் பயணியர் தங்கும் விடுதி)

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இயற்கை எழில் மிகுந்த சூழலில் அமையப்பெற்றுள்ள தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில், வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி "யாத்ரி நிவாஸ்" சுற்றுலாப் பயணியர் தங்கும் விடுதி கட்டுவதற்காக ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. சென்னை தீவுத் திடலில் "செயற்கை இசைநீரூற்று"

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ஆசியாவின் மிக நீளமான மெரினா கடற்கரையின் மிக அருகில் அமைந்துள்ள சென்னை தீவுத் திடலில் ஆண்டு முழுவதும் முக்கிய பொருட்காட்சிகள், பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த நிகழ்வுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. எனவே, இந் நிகழ்ச்சிகளைக் காண வருகை புரியும் பல்லாயிரக்கணக்கான உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளையும் அதிகம் மகிழ்வூட்டுவதற்காக சுற்றுலா மேம்பாட்டின்

ஒரு மைல் கல்லாக விளங்கும் வண்ணம் “செயற்கை இசை நீரூற்று” சென்னை தீவுத் திடலில் நிறுவுவதற்கு ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**எஸ்.பி.சண்முகநாதன்**
சுற்றுலாத் துறை அமைச்சர்